# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 138/ந/2018

நாள் : 10/08/2018

21.06.2018 நாளிட்ட
தினகரன் நாளிதழ் செய்தி,
திருவள்ளூர் பதிப்பு. – முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

நகராட்சி ஆணையர்,
செம்பாக்கம் நகராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் நகராட்சிப் பகுதியில் அரசுக்குச் சொந்தமானது எனக் கருதப்படும் 95 சென்ட் நிலம் குறித்து 21.06.2018 நாளிட்ட திருவள்ளூர் பதிப்பு தினகரன் நாளிதழில் "அதிகாரிகள் மற்றும் ஆளும்கட்சியினர் உதவியுடன் பல கோடி ரூபாய் அரசு நிலம் பிளாட் போட்டு விற்பனை " எனத் தலைப்பிட்டு செய்தி வெளியிடப்பட்டிருந்தது. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 7 (i) – இன் கீழ் மேற்குறிப்பிட்ட செய்தியினை முறையீட்டு மனுவாகப் பதிவு செய்து, செம்பாக்கம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் நகராட்சி ஐய்யப்பா நகர் பகுதியில் உள்ள 95 சென்ட் நிலத்தினை பிளாட் போட்டு விற்பனை செய்து வருவதாக நாளிதழில் வெளியிட்ட செய்தி குறித்து செம்பாக்கம் நகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. நகராட்சி ஆணையர் தனது 06.07.2018 நாளிட்ட அறிக்கையில், செம்பாக்கம் கிராமம், ஐய்யப்பா நகர், நில அளவை எண்.115/2 பி மற்றும் 115/32–இல் 0.98 சென்ட் பரப்பளவு நிலம் ஆவணங்களின் அடிப்படையில் தனி நபருக்குச் சொந்தமான நிலம் என்றும், மேற்குறிப்பிட்ட இடம் அரசுக்கு சொந்தமானது அல்ல என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், அந்நிலம் பாகப்பிரிவினை செய்யப்பட்டு திருமதி. ஜெயஸ்ரீபட், திருமதி. வத்சலா ரமேஷ் மற்றும் திரு கே. அசோக் ஹெப்பர் ஆகியோருக்குப் பாத்தியப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழும விதிகளுக்குட்பட்டும், நகராட்சி கட்டட விதிகளுக்குட்பட்டும் மனை உட்பிரிவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2. மேலும், 20.07.2018 நாளிட்ட கடிதத்தில், தினகரன் நாளிதழ் இந்நிலம் குறித்து மறுப்பறிக்கை பிரசுரம் வெளியிட்டுள்ள செய்தித் துணுக்கின் படியினையும் நகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். அச்செய்தியில் " செம்பாக்கம் கிராமத்தில் மக்கள் பயன்படுத்தும் நிலம் தனியாருக்குச் சொந்தமானது " என்று தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ளதுடன், புல எண்.115/32–இல் உள்ள 98 சென்ட் நிலம் 1963–ஆம் ஆண்டு திரு ராதாகிருஷ்ணன் என்பவர் சீத்தாபதி நாயுடு அவர்களிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றும், 01.03.1998–ஆம் ஆண்டு அவர் காலமானதைத் தொடர்ந்து, அந்நிலம் அவரது வாரிசுதாரர்களால் அனுபவிக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் செய்தி வெளியிட்டுள்ளது.

3. மேற்குறிப்பிட்ட நிலம் சம்பந்தமாக வாரிசுதாரர்களுக்கிடையே பாகப்பிரிவினை செய்யப்பட்டு, அவ்விடத்திற்கு பெருநகர் வளர்ச்சிக்குழும விதிகளுக்குட்பட்டும், நகராட்சி கட்டட விதிகளுக்குட்பட்டும் மனை உட்பிரிவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட நிலம் தனியாருக்குச் சொந்தமானது என தினகரன் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுவிட்ட நிலையில், அந்நிலம் குறித்தான நடவடிக்கையை இத்துடன் முடித்துக் கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

நகராட்சி ஆணையர்,
செம்பாக்கம் நகராட்சி,
செம்பாக்கம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இகோ. / உதிரிகள்